# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள். 01.04.2026

## முன்னிலை
## திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 06321/F/2024**

திரு.சு.முத்தையன், .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர்
(தலைமையிடம்), .. பொது அதிகார அமைப்பு
மாவட்ட காவல் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202.

**ஆணை**

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (01.04.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் திரு.சு.முத்தையன், அவர்கள் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். அவரது வருகையின்மை பதிவு செய்யப்பட்டது. பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத் தகவல் அலுவலர், திரு.T.சரவணன், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்), கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்கள் ஆணையத்தின் முன் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 07.02.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், "வடபொன்பரப்பி காவல் நிலையத்தில் கடந்த 2021-ம் ஆண்டு பணியாற்றிய உதவி ஆய்வாளர் ரவி அவர்களின் பணிப்பதிவேட்டிலிருந்து அவர் பிறந்த தேதி, பணியில் சேர்ந்த தேதி, ஓய்வு பெறும் தேதி, அவரது காலமுறை ஊதியம், தற்போது எந்த ஊதிய விகிதத்தில் அவர் சம்பளம் பெறுகிறார். அவரது அலுவலக முகவரி போன்ற தகவல்களை வழங்குவதற்கு தடையேதுமில்லை தமிழ்நாடு தகவல் ஆணைய வழக்கு எண்.23538/F/2013, (55337/F/2021) நாள் 09.09.2014 தகவல் ஆணையத்தின் தீர்ப்பின்படி முழு கோப்பின் நகல் தருக" என்பன போன்ற தகவல்களை 8

இனங்களில் வழங்கக் கோரி பொதுத் தகவல் அலுவலர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகம், கள்ளக்குறிச்சி மாவட்டம் அவர்களுக்கு மனு தாக்கல் செய்துள்ளார்.

3. மனுதாரர் பொதுத் தகவல் அலுவலரிடமிருந்து தகவல்கள் வழங்கப்படவில்லை என 21.03.2024 தேதியிட்டு பிரிவு 19(1)-ன் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். அதன் பின்னர், மனுதாரர் மேல்முறையீட்டு அலுவலரிடமிருந்தும் தகவல்கள் பெறப்படாததால் 22.05.2024 தேதியிட்டு பிரிவு 19(3)-இன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை இவ்வாணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 01.04.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கோரிய தகவல்கள் குறித்து ந.க.எண்.78/கூ.கா.க.த.அ.உ.ச/கள்ள/2024, நாள் 08.02.2024 மற்றும் ந.க.எண்.194/கூ.கா.க.த.அ.உ.ச/கள்ள/2024, நாள் 25.03.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அவற்றின் அதன் நகலை இணைத்து ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரர் கோரிய தகவல்கள், அவருக்கு வழங்கப்பட்ட தகவல்கள் ஆகியவற்றை ஆணையம் பரிசீலனை செய்கையில், மனுதாரருக்கு உரிய, சரியான தகவல்கள் ந.க.எண்.78/கூ.கா.க.த.அ.உ.ச/ கள்ள/2024, நாள் 08.02.2024 மற்றும் ந.க.எண்.194/கூ.கா.க.த.அ.உ.ச/கள்ள/2024, நாள் 25.03.2024 தேதியிட்ட கடிதங்களின் வாயிலாக பொது அதிகார அமைப்பால் வழங்கப்பட்டுள்ளது என்று ஆணையம் பதிவு செய்து, ஏற்றுக்கொள்கிறது. இதுகுறித்து மனுதாரரின் கருத்துக்களையும், வாதங்களையும் தெரிவிக்க அவருக்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தும் அவர் இன்றைய விசாரணைக்கு (01.04.2026) ஆஜராகத் தவறியுள்ளார். **எனவே, இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை இத்துடன் முற்றாக்கப்படுகிறது.**

**ஒம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 06321/F/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (தலைமையிடம்),
மாவட்ட காவல் அலுவலகம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 202.

**<u>மனுதாரர்</u>**

திரு.சு.முத்தையன்,
தெற்கு தெரு,
புத்திராம்பட்டுஅஞ்சல்,
சங்கராபுரம் வட்டம்,
கள்ளக்குறிச்சி மாவட்டம்-606 402.

Copy to: File NS/PA-

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005